DEPOSITON OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| | | |
|---|---|---|
| Calender | } | |
| Miscellaneous | } | |
| Preliminary Register | } | |
| Sessions | } | Case No.SC.179/2019 |

| | |
|---|---|
| Deposition of Witness | { PW.1 |
| | { Prosecution |
| | { |

| | |
|---|---|
| Name | : முருகேசன் |
| Father's Name | : --- |
| Taluk | :--- |
| Calling | :--- |
| Religion | :--- |
| Age | :--- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2024

2024 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் குள்ளமூப்பன்காட்டில் குடியிருந்து வருகிறேன். நான் பால் சொசைட்டியில் செயலாளராக பணிபுரிகிறேன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். என்னுடன் பிறந்த தம்பி பெயர் சின்னசாமி. என் அப்பா சடையன் ICL சிமெண்ட் நிறுவனத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டார். அந்த வருமானத்தில் இருந்து என் அப்பா 4.58 ஏக்கர் நிலம் கிரையம் வாங்கினார். எனக்கும் என் தம்பிக்கும் திருமணம் செய்து வைத்தார். திருமணத்திற்கு பின்னர் நானும் என் தம்பியும் தனிதனியாக வாழ்ந்து வந்தோம். எனக்கும் 2 குழந்தைகள், என் தம்பிக்கும் 2 குழந்தைகள். என் தம்பி லாரி டிரைவராக தொழில் செய்து 1999 ல் சாலை விபத்தில் இறந்துவிட்டர். அதன் பிறகு என் தம்பி மனைவி பேபியும், என் அம்மாவும் என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தை பாகம் பிரித்து கொடுக்கும் படி என் அப்பாவிடம் அடிக்கடி தகராறு செய்து வந்தார்கள். அதனால்

கடந்த 2000ம் ஆண்டு மூலப்பாதையில் பஞ்சாயத்து நடந்தது. அதில் செல்வராஜ், கருப்பண்ணன், தேவேந்திரன், சின்னன்னன் மற்றும் சிலரும் கலந்து கொண்டார்கள். அப்போது என் அப்பாவிடம் என் தம்பியின் குழந்தைகள் சிறுவயதாக இருப்பதால் சொத்தை பிரித்து கொடுக்கும் படி கேட்டார்கள். ஆனால் என் அப்பா குழந்தைகள் பெரியவர்கள் ஆனதும் தான் சொத்தை பிரித்து கொடுக்க முடியும் என்று சொன்னார். அதனால் பஞ்சாயத்தில் இருந்தவர்கள் என் அப்பாவின் மீது கோபம் அடைந்து அவரை அடித்து உதைத்ததில் அவருக்கு கை, கால், இடுப்பு ஆகிய இடங்களில் எழும்பு முறிவு ஆனது. இந்த சம்பவம் இரவு சுமார் 8.30 மணிக்கு ஆனது. அப்போது நானும் அங்கிருந்ததால் என்னையும் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். நான் பின்பு சம்பவம் தொடர்பாக மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு என் அப்பாவை சேலம் கோகுலம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அவர் சிகிச்சை முடிந்து என் வீட்டில் என்னுடைய பராமறிப்பில் இருந்து வந்தார். ஆனால் நான் கொடுத்த போலீஸ் புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதன் பிறகும் பேபியும், பழனியம்மாளும் என் அப்பாவை பராமறிக்க வரவில்லை. என் அப்பா கிரையம் வாங்கிய சொத்தில் பாதியை என் பெயரில் 2000 வருடம் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார். மீதி சொத்தை அவரே அனுபவித்து வந்தார். பின்பு 2006 ஆண்டு மீதி சொத்தையும் என் பெயரில் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துவிட்டார். அதனால் நான் மருத்துவமனை செலவு, வழக்கு செலவு, வாங்கிய கடன் ஆகியவற்றை தீர்ப்பதற்காக சொத்தை விற்பனை செய்யலாம் என்று ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோரை என் வீட்டிற்கு வர சொன்னேன். அன்று பாதி சொத்தை ரூ.14,50,000/-க்கு கிரையம் பேசி ரூ.1 லட்சம் முன்பணமாக பெற்று கொண்டு 11 மாதங்கள் கிரையத்திற்கு கெடு வைத்து கிரைய ஒப்பந்தம் எழுதி கொண்டோம். அன்றைய தினமே கிரைய சொத்தை ராஜமாணிக்கம், ராஜேந்திரன் ஆகியோரிடம் சுவாதீனமும் கொடுத்துவிட்டேன். இதை தெரிந்து கொண்ட பழனியம்மாள், பேபி இருவரும் 1ம் எதிரியிடம் இது பற்றி தகவல் சொல்லியுள்ளார்கள். அதனால் 1ம் எதிரி எங்கள் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்செல்வன், கிருஷ்ணன் ஆகியோரை எங்கள் வீட்டிற்கு அனுப்பி அவர்கள் என் அப்பாவிடம் நிலத்தடி நீர் சோதிக்க வேண்டும் என்று சொல்லி அவரை உடனடியாக மகுடஞ்சாவடிக்கு அழைத்து சென்றுள்ளார்கள். மேற்படி சம்பவம் நடந்த தேதி நினைவு இல்லை. அப்போது நான் வீட்டில் இல்லை. நான் வீட்டிற்கு வந்து பார்த்த போது என் அப்பா இல்லை என்று தெரிந்து பக்கத்து தோட்டத்துகாரர் மாதேஸ் என்பவரை விசாரித்தேன். அவர் என்னிடம் உன் அப்பாவை 2 நபர்கள் வந்து நிலத்தடி நீர்

சோதிப்பதற்காக இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றதாக சொன்னார். அதனால் நான் அன்று மாலை வரை என் அப்பா வந்து விடுவார் என்று இருந்துவிட்டேன். ஆனால் அவர் மறுநாள் காலை வரை அவர் வீட்டிற்கு வரவில்லை என்பதால் நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் என் அப்பாவை காணவில்லை என்று புகார் கொடுத்தேன். அதன் பேரில் போலீசார் தேடியும் என் அப்பா கிடைக்கவில்லை. சுமார் 10 நாட்கள் கழித்து என் அப்பா அழுது கொண்டு அவராகவே என் வீட்டிற்கு வந்தார். அப்போது நான் என் அப்பாவிடம் விசாரித்தற்கு அவர் தன்னை 2 நபர்கள் நிலத்தடி நீர் சோதிக்க வேண்டும் என்று இருசக்கர வாகனத்தில் மகுடஞ்சாவடிக்கு அழைத்து சென்றதாகவும் ஆனால் அவர்கள் 1ம் எதிரி சொன்னதன் பேரில் தன்னை நடுவனேரி அருகிலுள்ள சொரியன்பட்டி என்ற ஊரில் ஒரு வீட்டிற்கு அழைத்து சென்று அங்கு அடைத்து வைத்து உன் மகன் பெயரில் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்துவிடு என்று மிரட்டியதாகவும், ஆனால் தான் கையெழுத்து போட மறுத்துவிட்டதாகவும் பின்பு அன்று மாலையே இருகாலூர் மேட்டுபாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு அழைத்து சென்று அங்கு வைத்தும் தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்யும் படி அடித்து உதைத்ததாகவும் அதற்கும் தான் மறுத்துவிட்டதால் ஈச்சங்காட்டுபுதூருக்கு அழைத்து சென்று அங்கு ஒரு புதருக்குள் வைத்து மிரட்டியதாகவும் கையெழுத்து போடவில்லை என்றால் இங்கேயே வைத்து புதைத்துவிடுவதாக மிரட்டியதாகவும் அப்போதும் கையெழுத்து போட மறுத்துவிட்டதாகவும் பின்பு அதே வேனில் ஏற்றி மகுடஞ்சாவடி ஈஸ்வரன் கோவிலுக்கு அழைத்து சென்று அங்குள்ள கல் தூணில் கட்டி வைத்து கை, கால்களை மடக்கி பிடித்து கைரேகை, கையெழுத்துகள் ஆகியவற்றை பல பேப்பர்களிலும் பத்திரங்களிலும் வாங்கி கொண்டதாகவும் சொன்னார். அப்போதே என் அப்பாவிடம் பணம் கொடுப்பது போல் போட்டோ எடுத்துக்கொண்டு பின்பு பணத்தையும் பிடுங்கி கொண்டதாகவும் சொன்னார். அந்த சமயத்தில் பத்திர பதிவு அலுவலர் பலராமன், பத்திர எழுத்தர்கள் பழனிசாமி, சின்ராஜ், பேபி, பழனியம்மாள் மற்றும் 10 நபர்கள் அங்கிருந்ததாக என் அப்பா சொன்னார். அதன் பின்பு என் அப்பா பட்டினியால் மயக்கமாகிவிட்டதாகவும், அதன் பின்பு அதே வேனில் ஏற்றி அடையாளம் தெரியாதா இடத்திற்கு கொண்டு சென்று இறக்கிவிட்டதாகவும் சொன்னார். பின்பு சுய நினைவு வந்து பார்த்த போது விடிந்து விட்டதாகவும், அக்கம் பக்கம் இருந்தவர்களிடம் விசாரித்த போது அந்த இடம் திண்டுக்கல் என்று சொன்னதாகவும், அங்கிருந்தவர்களிடம் ரூ.5/-, ரூ.10/- பணம் வாங்கி கொண்டு வீட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டதாகவும் சொன்னார். இந்த தகவலின் பேரில் நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் அந்த புகாரின் பேரில் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் பின்பு நான் மகுடஞ்சாவடி

சார்பதிவாளர் அலுவலகத்தில் என் சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்த்தேன். அதில் என் அப்பா என் பெயருக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் ரத்து செய்யப்பட்டிருப்பதும், பின்னர் தமிழ்செல்வன், கிருஷ்ணன் ஆகியோருக்கு என் அப்பா, பழனியம்மாள், பேபி மற்றும் குழந்தைகள் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்திருப்பதும் எனக்கு தெரிய வந்தது. நான் மேற்படி ரத்து பத்திரம் மற்றும் கிரைய ஆவணங்கள் சம்பந்தமாக சிவில் வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கு நிலுவையில் இருந்த போது தமிழ்செல்வன், கிருஷ்ணன் ஆகியோர் அதே சொத்தை கணபதி, தங்கவேல், கோவிந்தராஜ் ஆகியோருக்கு 2007 ம் வருடம் கிரையம் செய்து கொடுத்தார்கள். கிரையம் பெற்ற 3 பேரும் நிலத்திற்கு வந்து நிலத்தை சுற்றிலும் கம்பிவேலி அமைத்தார்கள். நிலத்திற்குள் சிறிய அறை ஒன்றும் கட்டினார்கள். அதனை பராமசிவம் என்பவரின் ஆட்களும், கணபதி, கோவிந்தராஜ், தங்கவேல் ஆகியோர் செய்தார்கள். ஆனால் நான் ஏற்கனவே உயர்நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கி இருந்தும் அந்த உத்தரவை மீறி அவர்கள் அவ்வாறு செய்து முடித்தார்கள். அதன் பின்பு 2009 ம் ஆண்டு கணபதி, தங்கவேல், கோவிந்தராஜ் ஆகியோர் 1 ம் எதிரி பெயருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள். அதன் பின்பு 1 ம் எதிரி 2009 ம் ஆண்டு ஒரு நாள் தேதி, மாதம் தெரியாது காலை 10.00 மணிக்கு என் வீட்டிற்கு சுமார் 10 நபர்களுடன் வந்து இனிமேல் வழக்கு போட்டால் குத்தி கொலை செய்து விடுவேன் என்றும் குடும்பத்துடன் காலி செய்து விடுவேன் என்றும் மிரட்டினார். மீதம் இருக்கும் 2.29 ஏக்கர் நிலத்திற்கும் வந்து கையெழுத்து செய்து கொடுக்க வேண்டும் என்றும் இல்லையென்றால் குடும்பத்துடன் எறித்து விடுவேன் என்று மிரட்டினார். நான் அதற்கு பயந்து கொண்டு எதுவும் சொல்லவில்லை. பின்பு 10 நாட்கள் கழித்து தமிழரசன், சமரசம் மற்றும் 3 நபர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். அவர்கள் வீட்டில் உள்ள அனைவரும் வண்டியில் ஏறுங்கள் அண்ணன் அழைத்து வர சொன்னார் கையெழுத்து போடவேண்டும் என்று எங்களிடம் சொன்னார்கள். நாங்கள் வரமாட்டோம் என்று சொன்னதற்கு எங்களை வண்டியில் வலுக்கட்டாயமாக ஏற்றி கொண்டார்கள். அவர்கள் எங்களை மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்று பத்திர பேப்பர்களில் எங்களிடம் கையெழுத்து வாங்கி கொண்டு அனுப்பிவிட்டார்கள். அப்போது என் மகன் வயது 16. அதன் பின்பு மறுநாளே சுமார் 300 நபர்கள் எங்கள் நிலத்திற்கு வந்து என்னையும் என் வீட்டில் இருந்தவர்களையும் அப்புறப்படுத்தி எங்களுக்கு 10 ஆட்களை காவலுக்கு வைத்து விட்டு வீட்டை இடித்து தள்ளியும், தண்ணீர் தொட்டி, போர் ஆகியவற்றையும் இடித்து நிறவியும், பனைமரத்தை அறுத்து தள்ளியும், முடிந்த பிறகு எங்கள் துறத்திவிட்டார்கள். அவர்களில் ஆஜர் எதிரிகள் அனைவரும் அப்போது அங்கு

வந்திருந்தார்கள். அதன் பின்பு நான் இது சம்பந்தமாக சேலம் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1. புகார் சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

Sd/-முருகேசன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.